நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்;
ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44)

# இயேசுகிறிஸ்துவின்
# இரகசிய வருகை!
## The Transformation (Rapture)

**கடைசிக்கால நிகழ்வுகளின் திருப்புமுனை!**
**(The Turning Point of the End Time Events)**

---

விஜயகுமார் சாமுவேல்

**Title:** **Yesu Kiristhuvin Iragasiya Varugai**
Language: Tamil
First Edition: December 2020
Total Copies: 3,000

© All Rights Reserved

Vijayakumar Samuel

**Living Water Revival Ministries**
Email : livingwaterrevivalministry@gmail.com
livingwatersam@gmail.com
Website: www.livingwaterrevivalministry.org
Mobile : +91 9840313658

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | கடைசிக்கால நிகழ்வுகளின் திருப்புமுனை | 5 |
| 2. | நிருபங்களில் இயேசுகிறிஸ்துவின் வருகை | 7 |
| 3. | கர்த்தரின் வருகை சமீபமாய் இருக்கிறது | 8 |
| 4. | நினையாத நாழிகையில் இயேசு | 9 |
| 5. | இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் | 10 |
| 6. | சோதனைகாலத்திற்குத் தப்புவார்கள் | 11 |
| 7. | இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை | 12 |
| 8. | உபத்திரவக்காலம் | 13 |
| 9. | எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் | 14 |
| 10. | நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார் | 16 |

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44)

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி. 15:51)

இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம்போல என்னுடனேபேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்றது.

உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார் (வெளி. 4:1,2).

இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து

கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள் (வெளி. 4:10,11).

# இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை

## 1. கடைசிக்கால நிகழ்வுகளின் திருப்புமுனை

பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரையும், அவரைச் சூழ இருப்பவர்களையும், அங்கு நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், வெளிப்படுத்தின விசேஷம் நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்கள் விவரிக்கின்றன.

இந்தக் காட்சியும், விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களும், கடைசிக்கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாகவும், மறைந்திருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்தும் திறவுகோலாகவும் அமைந்துள்ளன.

இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது (வெளி.4:1).

"முன்னே எக்காளசத்தம்போல பேசக் கேட்டிருந்த சத்தம்" என்கிற குறிப்பு, முதலாம் அதிகாரத்தின் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரோடு, இயேசுகிறிஸ்துவோடு, இந்த நிகழ்வுகளை இணைக்கிறது.

முதல் தரிசனத்தில் கர்த்தர் நியாயாதிபதியாக, சபைகளின் ஆவிக்குரிய நிலையை, ஓர் இடைக்கால அறிக்கையாகத் தந்தருளினார். இவை, அந்த ஏழு சபைகளுக்கான கடிதங்களாக வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

இதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சம்பவங்களைக் கர்த்தர், இரண்டாம் தரிசனத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். பூலோகத்திலிருந்து இதற்கென யோவான் பரலோகத்திற்கு ஏறிவரக் கட்டளைப்பெற்றார்.

உடனே ஆவிக்குள்ளான யோவான், பரலோகத்தில் தான் கண்ட காட்சியையும், நிகழ்வுகளையும் அதன் முக்கியத்துவங்களையும் அறிந்துணர்ந்து, யாவற்றையும் அப்படியே பதிவுசெய்திருக்கிறார்.

## 2. நிருபங்களில் இயேசுகிறிஸ்துவின் வருகை

வெளிப்படுத்தின விசேஷத்தின் இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில் ஏழு கடிதங்கள் இடம்பெற்றுள்ளன.

இவை அந்நாட்களில் ரோம சாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியில் இருந்த ஏழு சபைகளுக்கு (எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா) இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பாகும்.

இந்த வார்த்தைகள், சபைச் சரித்திரத்தின் காலங்களில், மீட்கப்பட்ட தேவஜனம் தங்களுடைய வாழ்வை, இவற்றோடு ஒப்பிட்டுப்பார்த்து சீர்ப்படுத்திக்கொள்ள உதவினது, உதவுகிறது.

ஆதித்திருச்சபையின் நாட்கள் துவங்கி இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான காலத்தைக் கிருபையின் நாட்கள் என்றும், சபையின் காலம் என்றும் குறிப்பிடுகிறோம்.

மற்றொரு கண்ணோட்டத்தில், இக்காலம், சபைச் சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களாக அமைந்துள்ளதைப் போன்று தோன்றுகிறது.

சபைச் சரித்திரத்தின் அந்த ஏழு காலக்கட்டங்களின் ஆவிக்குரிய நிலைகள், ஏழு சபைகளின் தன்மைகளையும், கிரியைகளையும், அதே வரிசையில் ஒத்திருக்கிறதாகக் காண்கிறோம்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி, சபைச் சரித்திரத்தில், நாம் வாழும் இந்தக் கடைசிக்கால சபைகளின் ஆவிக்குரிய நிலையும் தன்மைகளும், பெருமையும் அகங்காரமுமான லவோதிக்கேயா சபையின் தன்மைகளோடும் கிரியைகளோடும் ஒத்திருப்பதாக அறியலாம்.

சபைகளின் வரிசையில் கடைசியில் இருக்கும் லவோதிக்கேயா சபையின் காலம், சபைச் சரித்திரத்தில், இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முந்தினக் காலமாக அமைந்துள்ளது.

## 3. கர்த்தரின் வருகை சமீபமாய் இருக்கிறது

சபையின் காலங்களைப்பற்றிய இந்த விளக்கங்களின் பிரதான நோக்கம், நாம் சபையின் காலத்தில் கடைசியில் இருக்கிறோம் என்பதை உணரச்செய்வதாகும்.

மேலும், சபைகளுக்கான நிருபங்களில், கடைசி மூன்று சபைகளுக்கான நிருபங்களிலும், இயேசுகிறிஸ்துவின் வருகையைப் பற்றி, கர்த்தர் எச்சரித்திருப்பதைக் காண்கிறோம்.

சர்தை சபைக்கு எழுதும்போது: நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் (வெளி. 3:3) என்கிறார்.

அடுத்து, பிலதெல்பியா சபைக்கு: இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்கு உள்ளதைப் பற்றிக்கொண்டிரு (வெளி. 3:11) என்று எச்சரிக்கிறார்.

கடைசியாக, லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது: இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன் (வெளி.3:20) என்கிறார்.

வருகையின் காலம் சமீபித்து வருகையில், இந்த வார்த்தைகள், ஒன்றுக்கொன்று முந்தின வார்த்தைகளைக் காட்டிலும், கர்த்தரின் வருகை சீக்கிரமாய் இருப்பதை, வலுவாகவும், அதிக தெளிவாகவும் வெளிப்படுத்தி, தீவிரமாய்ச் செயல்பட எச்சரிக்கிறது.

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்கிற வார்த்தைகள், கர்த்தரின் வருகைக்கு முன்னர், லவோதிக்கேயா சபைக்குக் கொடுக்கப்படும் கடைசி எச்சரிப்பின் சத்தமாக இருக்கிறது.

இதுவே, சபை சரித்திரத்தின் கடைசிக்காலக்கட்டத்தில் வாழும் நமக்கு, இயேசுவின் வருகைக்கு முன்பாக, மனந்திரும்பி, பரிசுத்தமாய் ஜீவிக்கத் தந்தருளப்படும் இறுதி வாய்ப்பாக இருக்கிறது.

# 4. நினையாத நாழிகையில் இயேசு

இந்நாட்களில், கர்த்தரின் வருகை இன்னும் நடைபெறவில்லை என்கிற உண்மையை மனதிற்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம்.

வெளிப்படுத்தின விசேஷம் 3ஆம் அதிகாரம் 20ஆம் வசனத்தில் கர்த்தர், இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்கிறார்.

இதைத் தொடரும் இரண்டாம் தரிசனத்தில், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களில் சிலர், வெண்வஸ்திரம் தரித்து, சிரசுகளில் பொன்முடி சூடி, மூப்பராக பரலோகத்தில் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்க யோவான் கண்டார்.

இந்தச் சம்பவங்களின்மூலம், இந்தக் கடைசிக்காலத்தில், சபைகளுக்கான முதலாம் தரிசனம் நிறைவுபெற்று, இரண்டாம் தரிசனத்தின் பரலோகச் சம்பவங்கள் துவங்கும் என அறியலாம்.

எனவே, இந்த இடைப்பட்டக்காலத்தில் நினையாத நாழிகையிலே கர்த்தரின் வருகை இருக்கும் என்று அறிய முடிகிறது.

நம்மைச் சுற்றிலும் நடந்தேறும் கொள்ளைநோய் போன்ற பேரிடர்கள், கடைசிக்காலத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி, கர்த்தரின் வருகை சமீபமாக இருப்பதை உறுதிச்செய்கின்றன.

அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் (மாற்கு 13:32).

ஆனாலும், நாள் நாழிகை என்று குறிப்பிடப்படும் அளவுக்கு நாம் கடைசிக்கட்டத்தில் இருகிறோம் என்பதை இதனால் உணரமுடிகிறது.

ஆகையால், நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44) என்ற எச்சரிப்பையேற்று, கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாவோம்.

## 5. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள்

சபைகளுக்கான தரிசனத்தையடுத்த இரண்டாம் தரிசனத்தில், பரலோகத்தில் மூப்பர்கள் தேவனுடைய சந்நிதானத்தில் ஒரு புதிய பாட்டைப் பாடினார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அந்தப் பாட்டில்: ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, .. .. எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள் (வெளி. 5:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

"உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு" என்கிற வார்த்தைகள், முந்தின பாவ நிலையிலிருந்து அவர்கள் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டதையும்; அவர்களுடைய மனுஷீகத் தன்மையையும், பூர்வீகத்தையும் வெளிப்படுத்துகிறது.

இதனிமித்தம், இந்தப் பரிசுத்தவான்கள் அதற்கு முன்னரே மறுரூபமாக்கப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்க எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என அறிகிறோம்.

சபை மறுரூபமாக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்வாகிய "இரகசிய வருகை" குறிப்பிட்ட இந்தக் காலக்கட்டத்தில் நிறைவுபெற இருக்கிறது.

எனவே, நாம் வாழும் இந்நாட்களிலேயே, கர்த்தரின் வருகை இருக்க அதிக வாய்ப்பிருப்பதாக அறியலாம்.

# 6. சோதனைகாலத்திற்குத் தப்புவார்கள்

இயேசுகிறிஸ்துவின் சத்தம் கேட்டு, வாழ்வைச் சீர்ப்படுத்தி இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாயிருப்பவர்களைக் கர்த்தர் பூமி எங்கும் வரவிருக்கும் சோதனைகாலத்திற்குத் தப்புவிப்பார்.

என் பொறுமையைக்குறித்துச் சொல்லியவசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி. 3:10) என்று கர்த்தர் பிலதெல்பியா சபைக்கு வாக்கருளியிருக்கிறார்.

இதையே எரேமியா தீர்க்கதரிசி: ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவான் (எரேமியா 30:7) என்பதாக குறிப்பிடுகிறார்.

தானியேல் தீர்க்கதரிசி இதை: யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் (தானியேல் 12:1) என்கிறார்.

சோதனைக்காலம், இக்கட்டுக்காலம், ஆபத்துக்காலம் என்பவைக் கர்த்தர் எச்சரிக்கும் மிகுந்த உபத்திரவத்தின் காலமாகும்.

ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று கர்த்தர் இதையே குறிப்பிடுகிறார்.

# 7. இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை

உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்னர், இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு, இப்படியாக எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என அறிகிறோம்.

இந்த நிகழ்வு "இரகசிய வருகை" என்றும் குறிப்பிடப்படுகிறது.

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச. 4:16,17) என இந்நிகழவு விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி. 15:51) என்றும் பவுல் எழுதியிருக்கிறார். அல்லேலூயா!

பரிசுத்தவான்களின் கூட்டமைப்பாகிய சபை மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் காலம் முடிவுக்கு வரும்; பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்களும் நிறைவுபெறும்; உபத்திரவக்காலம் துவங்கும்.

# 8. உபத்திரவக்காலம்

இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது, சபை மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும். வருகைக்கு ஆயத்தமாயுள்ளவர்கள் சபையோடு எடுத்துக்கொள்ளப் படுவார்கள். இதைத் தொடர்ந்து பூமியெங்கும் உபத்திரவம் உண்டாயிருக்கும்.

அந்நாளில் உயிரோடிருந்து, அஜாக்கிரதையாய் இந்தத் தருணத்தை நழுவவிடுபவர்கள், கைவிடப்பட்டு உபத்திரவத்தின் நாட்களுக்குள்ளாகி, அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கும் வஞ்சகங்களுக்கும் உட்படுவார்கள்.

சபையின் காலத்தில், இந்தக் கிருபையின் நாட்களின் சிறப்பு, இந்நாட்களில் அந்திக்கிறிஸ்துகள் தேவனுடைய பிள்ளைகளின் சாட்சியின் வாழ்வுக்கு விரோதமாக எழும்பாதபடிக்கு, பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தடைசெய்கிறார்.

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் .. .. நாசம்பண்ணுவார் (2 தெச. 2:7,8).

பவுல் இந்த வசனங்களில் அந்திக்கிறிஸ்துவை அக்கிரமக்காரன் என்றும், பரிசுத்த ஆவியானவரை, அக்கிரமக்காரனைத் தடைசெய்கிறவராகவும் குறிப்பிடுகிறார்.

உபத்திரவக்காலத்தில், ஆவியானவரின் ஒத்தாசையின்றி, சாட்சியைக் காத்துக்கொண்டு, இயேசுகிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருந்து இரட்சிக்கப்படுவது மிகவும் கடினமாக இருக்கும்.

இதனிமித்தம், நமக்கருளப்பட்டிருககும் இந்தக் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள எச்சரிக்கப்படுகிறோம்.

## 9. எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்

கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று எச்சரிக்கப்படுகிறோம். ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் (மத்தேயு 24:4,11).

கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24) என்று கர்த்தர் எச்சரித்திருக்கிறார்.

மேலும், இந்நாட்களில் இம்மட்டும் கண்டிராத கொடிய கொள்ளை நோய் போன்ற பேரிடர்கள் பெருமளவில் சேதங்களை ஏற்படுத்தி உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றன.

சமுதாயத்தில் ஏழை எளியவர்களும், தனிமையானவர்களும், அன்றாடக ஊதியம் பெறுபவர்களும், பொருளாதாரத்திலும் மனதளவிலும், மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பேரிடரின் தாக்கத்தினால் உண்டாயிருக்கும் வேலை இழப்பு, பொருளாதாரப் பின்னடைவு, சரீர பெலவீனங்கள், சமாதானக் குறைவு போன்றவை, கர்த்தருடைய ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் வாழ்வாதாரத்தையும் பாதித்திருக்கிறது.

மறுபுறம், தேவனுடைய சந்நிதானத்தில் இதற்கென இரவும் பகலும் உபவாசத்தோடும், கண்ணீரோடும் மன்றாடுகிற ஊழியர்களும் விசுவாசிகளும் எழும்பியிருக்கிறதைக் காண்கிறோம்.

ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14) என்று எச்சரிக்கப்படுகிறோம்.

இந்தக் கிருபையின் நாட்களில், வாசற்படியிலே நின்று தட்டும் இயேசுவின் சத்தம் கேட்டு, பரிசுத்தத்தோடும், உண்மையோடும், சாந்தத்தோடும், மனத்தாழ்மையோடும் கிறிஸ்துவுக்கென வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

உபத்திரவக்காலத்தின் நியாயத்தீர்ப்புகளுக்கும், வாதைகளுக்கும் தப்பி, கர்த்தருடைய இரகசிய வருகையிலே நாம் அவரோடே எடுத்துக்கொள்ளப்பட்டு, நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நம்மை ஒப்புக்கொடுப்போம்.

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் (லூக்கா 21:36) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

அதிசீக்கிரமாய் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருப்போம். பாவமன்னிப்பின் நிச்சயத்தோடும், நித்தியராஜ்யத்தின் எதிர்பார்ப்போடும் காத்திருப்போம், ஆயத்தமாயிருப்போம். இனிக்காலம் செல்லாது.

# 10. நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள விசேஷங்கள் அனைத்தும், இதை வாசிக்கிற உங்களுக்கும், எனக்காகவுமே எழுதப்பட்டுள்ளன.

இந்தக் கையேட்டின் பிரதான நோக்கம், கிறிஸ்துவின் அன்பை அறிந்து, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள், விழித்திராமல் அஜாக்கிரதையினால், வருகையில் இயேசுவோடே எடுத்துக்கொள்ளப்படும் வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்பதாகும்.

இந்தச் செய்தியை வாசிக்கிற யாரேனும், இயேசுவின் அன்பை இம்மட்டும் அறியாது, அவரால் தந்தருளப்படும் விடுதலையை அனுபவிக்காது இருப்பார்களேயானால், இயேசுகிறிஸ்துவை அறிந்து விசுவாசித்து, அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும்.

இம்மட்டும் நாம் தியானித்த வசனங்களும், நம் கண்ணெதிரே நடந்தேறுகிற சம்பவங்களும், இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை உறுதிச்செய்கின்றன.

ஆகையால் நாம் கீழ்ப்படியாமையினாலே, அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு, நம்முடைய உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு, உணர்வடைந்து, நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்போம்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாசற்படியிலே நின்று தட்டுகிறார்; நினையாத நாழிகையிலே சீக்கிரமாய் வரவிருக்கும் அவரைச் சந்திக்க விழிப்புடன் ஆயத்தமாயிருப்போம். அல்லேலூயா! ஆமென்.